Volume 7 Issue 2 February 2026 E-ISSN: 2582-2063

# பாண்டிய நாட்டில் சமய நெறிமுறைகள் பற்றி – ஓர் ஆய்வு

**முனைவர் கு. சந்திரசேகரன்**
*இணைப் பேராசிரியர், தலைவர்,வரலாற்றுத்துறை*
*தேவாங்கர் கலைக்கல்லூரி, அருப்புக்கோட்டை*

## முன்னுரை

சங்ககாலம் சமயப் பூசல் இல்லாத அமைதியான காலமாயிருந்தது. அதற்கு பின் வந்த களப்பிரர் காலம் சமயப்பூசலின் தொடக்க காலமாக இருந்தது. மற்றும் இதில் இந்துக்கள் துன்புற்றனர். சமண, பௌத்த சமயத்தவர்கள் அவர்களின் சொல்வாக்கை பெருக்கினர். களப்பிரர்களுக்கு அடுத்த படியாக வந்த இடைக்கால பாண்டியர் காலத்தில் சமயப்பூசல் வலுப்பெற்றது. இவர்களது சமகாலத் தொண்டை மண்டல நாயக்கர்களாம் பல்லவ மன்னர்களின் ஆட்சியிலும் சமயப்பூசல் மலிந்திருந்தது. சைவரும், வைணவரும், பௌத்தரையும், சமணரையும் விரட்டி அடிப்பதில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர். பாண்டியர்கள் வைதீக சமயத்தவரையும் போற்றினர். இதற்கு உதாரணமாக அமைவது வேள்விக்குற கிராமத்தைப் பிராமணர்க்கு வழங்கியது ஆகும்.

வட இந்தியாவில் எவ்வாறு குப்தப் பேரரசர்கள் வைதீக மறுமலர்ச்சிக்கு வித்திட்டார்களோ அது போன்று தமிழகத்தில் பல்லவர், பாண்டியர்கள் , சோழர்கள், சைவ, வைணவ சமயத்தை காக்கத் துணை புரிந்தனர் என்பதில் ஐயமில்லை. பாண்டியர்கள், அசுவமேதயாகம், வாஜபேயயாகம், ஹிரண்யகர்ப்பதானம், துலாபாரதானம் போன்றவற்றைச் செய்து அக்கிர ஹாரங்கர் உண்டாக்கி வைதீக சமயம். வணரப்பாடுபட்டனர் என்பது பாண்டியர் செப்பேடுகள் கல்வெட்டுக்கள் மூலம் அறியப்படுகிறது.[1]

## சைவ சமய வளர்ச்சி

பாண்டிய நாட்டில் சைவ சமயம் வளர்ந்தற்கு மன்னரும், மக்களும் செய்த தொண்டு குறிப்பிடத்தக்கதாகும். பாண்டிய மன்னன் அரிகேசரி என்ற நீன்ற சீர் நெடுமாறன் என்பான் சமண சமயத்தை தழுவியிருந்த காலம் அது. அவனது மனைவியாரும் அமைச்சர் குலச்சிறையிரும் சைவ சமய வளர்ச்சிக்கு பாடுபட்டனர். இக்காலத்தில் தோன்றிய சைவ சமயக்குரவர் திருஞானசம்பந்தர் சைவ சமயம் வளர பெருந் தொண்டாற்றினார். இப்பெரியாரை மதுரைக்கு எழுந்தருளுமாறு பாண்டியன் மனைவி வேண்டினார். திருஞானசம்பந்தரும் மதுரைக்கு வந்தருளினர் பாண்டியன் முன்னிலையில் சமணர்க்கும் அவருக்கும் அனல்வாதம், புனல்வாதம், நடந்து திருஞானசம்பந்தர் வெற்றி கண்டார். பாண்டிய மன்னன் சைவ மதம் சேர்ந்தார். எனினும் பேராசிரியர் கே.கே.பிள்ளை “அக்கால சம்பந்தர் செய்துள்ள புதுமைகளை இக்கால விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்ளார் அவை எல்லாம் உயர்வு நவிற்சி மிகைப்படக் கூறல் எனவும் மாறுபடப்பருதுவர்” இவ்வளவு சக்தி படைத்த ஞானசம்பந்தர் 8000 சமணர்களைக் கழுவிலேற்றச் சம்மதித்தார் என்பது நம்ப முடியாத கொடுமையாகவே உள்ளது. இதற்குச் சமகாலச் சான்று எதுவும் இல்லை.

பாண்டியனை சைவனாக மாற்றியது போன்றே முதலாம் மகேந்திர பல்லவனை அப்பர் சுவாமிகள் சைவ சமயத்திற்கு மாற்றினார்.

பாண்டிய மன்னர்களும் சைவக் கோவில்களின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு வழங்கினார். திருவிழாக்கள் நடத்தினர். பாண்டியன் வரகுணன் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவன் கோயில் வழிபாட்டு நிவந்தமாக1400 பொற்பாட்டுக்கு 290 பொற்காசுகள் அளித்தார். இவரே அம்பாசமுத்திரம் கோயில் வழிபாட்டுக்கு 290 பொற்காசுகள் வழங்கினார்.[2] பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் மனைவி வட அற்காடு மாவட்டம் திருவொற்றியூர் சிவன் கோவிலுக்கு விலை மதிப்பில்லா பொன் அணிகலன்களை வழங்கினார். மதுரை கோயிலில் கீழைக் கோபுரத்தையும்

அமைத்தார். குலசேகரபாண்டியன் (1168-1175) இக்கோயிலில் சாமி சன்னதி, அர்த்த மண்டபம் கட்டினார்.[3]

மேலைக் கோபுரம்(1315-1345) பராக்கிரம பாண்டியரால் கட்டப்பட்டது.

கோவில்களில் விழாக்காலங்களின் நடனங்கள் நடத்தப்பட்டன. நாள்தோறும் இசைமழை பொழியும் பக்திப்பாடல்கள் பாடப்பட்டன. மார்கழி மாதத்தில் அதிகாலையில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டன.

பாண்டியர் காலத்தில் சைவ சமயத்தின் பல பிரிவுகளும் இயங்கின. பாண்டியர் காலத்தில் சைவ மடங்கள் கட்டப்பட்ன. மதுரை மடம், பிட்சாமடம், திருவாரூர்மடம், திருவாரூர் தட்சிண கோளகி மடம், காசி மடம் போன்றவையாகும். திருச்சுழியில் காளாமுகப் பிரிவினருக்கென ஒரு மடம் இருந்தது.[4] பத்தாம் நூற்றாண்டுக்கு பின் சைவ சித்தாந்தம் என்ற புதியதோர் சித்தாந்தக் கருத்து வளர்ந்தது. பாண்டிய நாட்டில் ‘‘திருஞானம்’’ என்ற சைவ சித்தாந்த நூல் தினமும் வாசிக்கப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டது இதன் கல்வெட்டு நெல்லையப்பர் கோயில் உள்ளது.[5]

**வைணவ சமய வளர்ச்சி**

ஆழ்வார்கள் காலத்தில் வைணவ சமயம் சிறப்பாக வளர்ந்த ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். இவர்களின் தெய்வீகப் பாடல்களின் தொகுப்பு நாலாயிர திவ்விய பிரபந்தம் ஆகும். பாண்டிய நாட்டு ஆழ்வார்கள், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய நால்வர் ஆவர். இவர் தம் தொண்டால் வைணவம் வளர்ந்தது.

**நம்மாழ்வார்**

சடகோபன் என்றழைக்கப்படும் நம்மாழ்வார் திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரில் (பழைய குருகூர்) வேளாளர் குலத்தில் பிறந்தர் இவரது பிறபெயர்கள் மாறன்,காரி, பராங்குசன் என்தாகும். 35 வயதில் உலக வாழ்வைவிட்டு ஞான வாழ்வைத் தொடந்தார். அப்போது அவர் பாடிய பாடல்கள் ‘‘திருவாய்மொழி’’என்ற படைப்பாகும். இவரது மற்றப்படைப்புகள் திருவிருத்தம், திருவாசிரியம் பெரிய திருவந்தாதி போன்றவையாகும். இவரது பாடல்களில் மிக ஆழ்ந்த இறையனுபவத்தையும் காணலாம். இராமானுஜ சித்தாந்தத்திற்கு அடிப்படையாய் அமைந்தது இவரது திருவாய் மொழியேயாகும். வேதாந்த தேசிகர் திருவாய் மொழிக்கு ‘‘திராவிடோபநிீத்சாரம்’’ என பெயரிட்டார்.[6]

**மதுரகவியாழ்வார்**

இவர் நம்மாழ்வரின் சீடராவார் திருநெல்வேலி மாவட்டம் திருக்கோ;ரில் பிறந்த மதுரகவியால்வார் பாண்டியன் பராந்தக நெடுஞ்சடையனின் அமைச்சராகப் பணியாற்றியவராவார். இவர் நம்மாழ்வாரின் பாடல்களைப் பாடியும், அவரை வணங்கியும் வந்தார். நம்மாழ்வாரைப் பற்றிஏழுபதிகங்களைப் பாடினார். ஆண்டவனின் அருட்செல்வர்களைப் பாடியும் வணங்கியும் முக்திடைய முடியும் என உலகிற்கு உணர்த்தினார்.

**பெரியாழ்வார்**

ஸ்ரீவில்லிபுத்தூரில் தோன்றிய பெரியாழ்வார் ஸ்ரீவல்லபாண்டியனின் காலத்தவராவார். இவர் மன்னனின் வேண்டுக்கோள் படி மதுரை சென்று திருமாலின் பெருமைகளைப் பரப்பினர். வாதத் திறமையில் பலரை வென்றார் ‘‘பாண்டியன் கொண்டாடப்பட்டர் பிரான்’’ என்ற பெயரும் இவருக்கு வழங்கிற்று.[7] இவரது முக்கிய படைப்பு நாலாயிரதிவ்வியபிரபந்தத்தின் ஒரு பகுதியான பெரியாழ்வார் திருமொழியாகும்.

**ஆண்டாள்**

பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளே ஆண்டாள் ஆவார். இவர் திருமால் மீது காதல் கொண்டு அவரைத் திருமணம் செய்து கொண்டார். சிறுவயதில் திருமாலுக்குக் கட்டிய மாலையைத் தன் கழுத்தில் போட்டு அழகு பார்த்து விட்டுப் பின் ஆண்டவது அனுப்புவார். இவர் பாடிய திருப்பாவை மார்கழி மாதம் தோறும் தினமும் அதிகாலையில் பெண்களால் பெரிதும் போற்றி பாடப்படுகின்றது. 143பாடல்களிலும் திருமால் மீது கொண்ட காதல் பற்றி கூறுகின்றார். பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று ஆண்டாளுக்கும் பெருமாளுக்கும் திருமண உற்சவ் அனைத்து வைணவத் தலங்களிலும் நடத்தப் பெறுகிறது.[8]

**பிற வைணவர்கள்**

மேற்கூறிய நான்கு ஆழ்வார்கள் தவிர பிற ஆழ்வார்களும் பாண்டிய நாட்டில் உள்ள முக்கியமான பதினேழு வைணவ திருக்கோவில்களுக்கு வந்து வணங்கி சிறப்பித்து உள்ளனர். ஆழ்வார்களைப் போன்றே திருக்கோட்டியூர் நம்பி, திருவாய்மொழிப்பிள்ளை போன்ற ஆச்சாரியார்களும் வைணவ சமயத்தினைப் பரப்பினர். திருநகரில் பிறந்த திருவாய்மொழிபிள்ளை திருக்குருகூரில் இராமானுஜருக்குக் கோவில் கட்டினார். மணவாள மாமுனிவர் உபதேச ரத்ன மாலை எழுதினார். பாண்டிய நாட்டில் பல வைணவ மடங்கள் கட்டப்பட்டன. அழகர் கோவில்திருநாடுடையாமல் வைணவ மடமும், ஆழ்வார் திருநாகரி அருளாலதாசன் மடமும், வானமாலை மடமும் ஆகும்.

சைவக் கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்தது போன்றே பாண்டியர்கள் வைணவக் கோயில்களுக்கு நிவந்தங்கள் வழங்கினர். மாறவர்மன் விக்கிரம பாண்டியன்,சடையவர்மன், குலசேகரனின் பிறந்த நாளில் குலசேகரன் சந்தியை நடத்த ஸ்ரீவரமங்கை கோவிலுக்கு நிவந்தங்கள் வழங்கினார்.

அழகர் கோவிலில் “திருநாடுடையார் மடம்” முன்பு இருந்தது.

திருக்குறுங்குடியில் திரிதண்டி துறவிகள் வாழ்ந்த மடம் ஒன்று இருந்தது.[9]

**சமண, பௌத்த சமயங்கள்**

**சமண சமயம்**

பாண்டிய நாட்டில் சங்க காலத்திலிருந்தே சமணங்கள் வாழ்ந்து உள்ளனர். மதுரையைச் சுற்றியிருந்த ஆனைமலை, பரங்குன்றம், ஒருவகம், பப்பாரம், பள்ளி, பேராந்தை, இருங்குன்றம், அருங்குன்றன் போன்ற எட்டு மலைகளில் சமண சமயத்தவர்கள் செல்வாக்குடன் இருந்துள்ளனர். மதுரைக்கு கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வந்த திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் அவர்களது செல்வாக்கு குறித்து எடுத்தியம்புகின்றார். அவரது வருகையின் போது சைவர்க்கும் சமணர்க்கும் இடையே சமயப் பூசலும் வாதங்கள் நடைபெற்றன. பாண்டியன் நெடுமாறனின் மனைவி, மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவர்களும் ஆதரவு அளித்தனர்.

கி.பி.நூற்றாண்டி இருந்து சைவத்தினைப் போன்று பல சமய உத்திகளைக் கையாண்டு மீண்டும் தலைதூக்கி மறுமலர்ச்சி அடைந்தது. கி.பி.8 ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரை சிறப்புடன் விளங்கியது.பாண்டிய நாட்டில் கி.பி.9-10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அச்சணந்தி என்ற சமண முனிவர் பல இடங்களில் தீர்த்தங்கரர் உருவங்களை செய்வித்து சமணசமய வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தனர்.

**பௌத்த சமயம்**

சமணச் சமயத்தினைப் போன்றே பௌத்த சமயமும் சங்ககாலத்திலிருந்து கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரை பாண்டிய நாட்டில் இருந்து உள்ளது. பௌத்த பள்ளி ஒன்று மதுரை மாநகரில் இருந்தாக மதுரைக்காஞ்சி தெரிவிக்கின்றது. பௌத்த நூலான மணிமேகலை

எழுதிய சீத்தலைச்சாத்தனார் மதுரையில் வாழ்ந்தவராம் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிக்கு வந்த யுவான்சுவாங் மதுரைப்பகுதியில் அசோகர் காலத்தில் எடுக்கப்பட்ட விவரம் ஒன்று இருந்ததாகக் குறிப்பிடுகின்றனார். இடைக்காலத்தில் சமண சமயத்தினை போன்று பௌத்த சமயம் மிகுந்த செல்வாக்குகள் விளங்கவில்லை. ஆனால் இலங்கையின் தொடர்பால் பாண்டிய நாட்டில் பாண்டியர் சோழர் காலங்களில் பல புத்தரது திருமேனிகள் தெரிவிக்கப் பட்டுள்ளன. இராமேஸ்வரம் தீவில் அரியாங்குன்று என்ற பகுதியில் பெரும் பௌத்தப் பள்ளி ஒன்று இருந்தது அழிந்து போனது. அதிலிருந்து பல செப்புத் திருமேனிகளும் புத்தரின் கற்சிற்பமும் தமிழ்நாடு அரசு தொல்லிய துறையால் கண்டறியப்பட்டுள்ளன.

**முடிவுரை**

புத்தரின் கற்சிற்பங்கள் பாண்டிய நாட்டில் பல இடங்களில் கிடைத்துள்ளன. மதுரைக்கு அருகிலுள்ள பாண்டி கோவிலில் புத்தரின் சிற்பம் பாண்டி முனிவர் என்ற பெயரில் புத்தரின் சிற்பம் பாண்டி முனிவர் என்ற பெயரில் வைத்து வழிபடப்படுகிறது. ஆத்தூர், இளையங்குடி, மாறநாடு போன்ற இடங்களிலும் புத்தரின் திருவுருவங்கள் கிடைத்துள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. பு.சேதுராமன், தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு, மதுரை 2001 ப.242
2. மேலது ப.243
3. K.V.Raman, Indian Architecture P.247
4. A.R.E 436, 1914
5. A.R.E 436,1929-30
6. மேலது, ப 254
7. A.R.E 277, 1929- 30
8. மேலது, ப 246
9. மேலது, ப 247